DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -21

| | | |
|---|---|---|
| Name | : திருமதி.ராஜாத்தி | Caste: |
| Husband'sName: | திரு. சாமிதுரை | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 11th day of January -2024.

**A1 , A2, A5 to A7, A9, A13 to A18 present. A8 and A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**Date: 11.01.2024**

**முதல் விசாரணை**

நான் வங்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு ஒரு மகன். அவர்பெயர் தெய்வமணி. இறந்துபோன காசிநாதன், மகாலிங்கம், தர்மலிங்கம், பிரபு, சுரேஷ் ஆகியோரை தெரியும். காசிநாதனுக்கு சொந்தமான நிலத்திற்கு எங்களது பூமி இணைநிலமாகும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது ஊரில் கிழக்குபக்கம் வசிக்கிறார்கள்.

இப்போதிலிருந்து சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பாக நான் ஒருநாள் இன்னொருவருக்கு சொந்தமான விவசாய நிலத்தில் களைவெட்டிகொண்டிருந்தேன். அப்போது கொலை, கொள்ளை என்று சத்தம் கேட்டது. நான் யாரோ விபத்தில் அடிபட்டுவிட்டார் என்று நினைத்துகொண்டேன். நான், தவமணி, பவுனு மூவரும் ஊருக்குள் வந்தோம். ஊருக்குள் நிறைய போலிசார் நின்றுகொண்டிருந்தார்கள். ஒரு

வேன் நின்றுகொண்டிருந்தது. என்ன ஆனது என்று நாங்கள் பார்த்தோம். நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் வீட்டிலிருந்தபோது என்னிடம் தண்ணீர்வாங்கி குடித்தார்கள். நான் அவர்களிடம் என்னவானது என்று கேட்டேன். அவர்கள் கொலைநடந்துவிட்டதாக சொன்னார்கள்.

மறுநாள் காலையில் சங்கர்வீட்டை சேர்ந்தவர்கள் கத்திகொண்டு ஓடினார்கள். அப்போது தான் அவரது வீட்டில் யாரோ இறந்துவிட்டதாக தெரிந்துகொண்டேன். 5 பேர் இறந்துவிட்டதாக சுமார் ஒருமாதம் கழித்து தெரிந்துகொண்டேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. மேற்படி நபர்கள் எப்படி இறந்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் இல்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றாலும், அந்த விசாரணையில் எங்கள் ஊரில் சுமார் 10 ஆண்டுகளாக காசிநாதன் தலைமையில் ஒரு பிரிவும், எதிரி ரவிசந்திரன் தலைமையில் ஒருபிரிவுமான இருந்துவந்தார்கள் என்றும், காளியம்மன் கோவில் சம்மந்தமாக ஏற்பட்ட பிரச்சனையினால் ரவிசந்திரன் பிரிவிலிருந்த தேசிங்குபாலன் என்பவர் காசிநாதன் குடும்பத்தினரால் கொலைசெய்யப்பட்டதாகவும், அது சம்மந்தமாக வழக்கு பதிவுசெய்யப்பட்டு காசிநாதன் குடும்பத்தினர் சிறைக்கு சென்றுவிட்டு சிறிது நாட்களுக்கு முன்பாக ஊருக்கு வந்ததாகவும், தங்களது சொத்துக்களை ரவிசந்திரன் தரப்பினர் அழித்துவிட்டதாக காசிநாதன் மகன்கள் திட்டியதாகவும், தேசிங்குபாலனின் மனைவி சசிகலா எதிரிகள் ரவிசந்ரன், திருஞானம், பழனிசாமி மற்றும் அவர்களை சார்ந்தவர்களை அழைத்து காசிநாதன் குடும்பத்தினர் என் கணவரையும் கொன்றுவிட்டு என் குடும்பத்தையும், என்னையும் தரகுறைவாக பேசுகிறார்கள் அவர்களது குடும்பத்தை அடியோடு அழிக்கவேண்டும் என் சொத்தை விற்றாவது உங்களை காப்பாற்றுகிறேன் என்று ஒரு நாள் சொன்னதாகவும், அதனை நான் பார்த்ததாகவும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

மேலும் நான் போலிசார் விசாரணையில் 16.05.2008 அன்று காலையில் நான், ராதா, சந்திரகலா ஆகியோர் கரும்பு வெட்டும் கூலிவேலைக்கு போய்விட்டு அன்று காலை 9.30 மணிக்கு வீட்டிற்கு சாப்பிடுவதற்காக வந்துகொண்டிருந்தபோது எங்களுக்கு முன்னால் ராஜலிங்கம், மகாலிங்கம், பிரபு, சுரேஷ் ஆகியோர் எங்களுக்கு முன்பாக போய்கொண்டிருந்ததாகவும், மச்சகேந்திரன் வீட்டிற்கு மேற்காக நாங்கள் சென்றுகொண்டிருந்தபோது பிரபுவும், சுரேசும் திரும்ப ஓடிவந்தார்கள் என்றும், வெட்டுங்கடா வெட்டுங்கடா என்ற சத்தடுடன் பட்டாகத்தியுடன் எதிரிகள் ரவிசந்திரனும், திருஞானமும் சுரேசை துரத்திகொண்டு வந்து வழிமறைத்து சுரேசை மாறிமாறி வெட்டினார்கள் என்றும், எங்களுக்கு முன்னால் ஓடிய பிரபுவை எதிரிகள் பழனிசாமியும், பிரபாகரனும் பட்டாகத்தியால் மாறிமாறி வெட்டியதாகவும், எதிரி பழனிசாமி பிரபுவின் தலையை தனியாக வெட்டி எடுத்ததாகவும், பின்னர் பழனிசாமியும் பிரபாகரனும் பிரபுவின் தலையை காலால் உதைத்து உருட்டிகொண்டே சிமெண்ட் ரோடு வழியாக ஓடியதாகவும், எதிரிகள் காளியம்மன்கோவில் பக்கம் போனதற்கு பிறகு நாங்கள் சுரேசை தூக்கிபார்த்தபோது அவன் இறந்துவிட்டதாகவும், நாங்கள் பின்னர் சென்று பார்த்தபோது தர்மலிங்கம், மகாலிங்கம் ஆகியோர் வெட்டப்பட்டு இறந்துகிடந்ததாகவும், தர்மலிங்கத்தின் உடலில் தலையில்லாமல் முண்டமாக கிடந்தது என்றும், அவரது தலை காளியம்மன் கோவிலின் முன்பாக உள்ள சூலத்தில் குத்தப்பட்டிருந்தது என்றும், பிரபுவின் தலை காளியம்மன் கோவில் பின்புறம் வைக்கப்பட்டிருந்தாகவும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

போலிசார் விசாரணையில் நான் எதிரி சக்திவேல் மகன் ரமேஷ் தர்மலிங்கத்தின் தலையை சூலத்தில் குத்தியதாகவும், எதிரி பழனிசாமி பிரபுவின் தலையை காளியம்மன் கோவில் பின்புறம் கொண்டுபோய் வைத்ததாகவும் கேள்விபட்டேன் என்றும், சம்பவ தினத்தன்று காலை 10.00 மணியளவில் பாலுசாமி வீட்டின் பின்புறம் எதிரிகள் ரவிசந்திரன், திருஞானம், பழனிசாமி, ராஜதுரை, தினேஷ், ரமேஷ், சிலம்பரசன், பாஸ்கர், சசிகலா, கனகவள்ளி, திருவாளப்புத்தூரான் ரமேஷ், பிரபாகரன் மற்றும் சிலர் அருவாள், கத்தி போன்ற ஆயுதங்களுடன் இருந்ததாகவும், சதிதிட்டம்போட்டு குளிக்க போன

நபர்களை சசிகலாவும், கனகவள்ளியும் பார்த்து தகவல் சொன்னதாகவும், தேசிங்குபாலனை கொன்றதற்கு பழிக்குபழி வாங்கியதாக தெரிந்துகொண்டதாகவும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

போலிசார் விசாரணையில் நான் உண்மை சங்கதிகளை சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**அனைத்து எதிரிகள் தரப்பிலும் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.